நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு.206/2026**

**in**

**எஸ்.டி.சி.எண்.419/2023**

கனகராஜ் ... மனுதாரர்/எதிரி

/எதிரிடை/

உதவி தொழிலாளரின் ஆய்வாளர், ... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

**உத்தரவு**

**1.** மனுதாரர்/எதிரி தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளை மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி, குவிமுச பிரிவு 311 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை 03.01.2026 ம் தேதியன்று முதல் விசாரணை செய்யப்பட்ட அன்றே மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாமல், தற்போது மீண்டும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கோருவது ஏற்புடையதல்ல என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

3. மனுதாரர் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை முதல் விசாரணை செய்தபோது குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாமல் போனால் மனுதாரர்/எதிரி தரப்பு நியாயத்தை எடுத்துரைக்க இயலாத சூழ்நிலை ஏற்படும் என்று வாதிடப்பட்டது.

4. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை முதல் விசாரணை செய்தபோது, மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. உரிய நேரத்தில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாததற்கு மனுதாரர் தரப்பில் கூறும் காரணமாவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்ற போதிலும், விசாரணை நீதிமன்றமானது தரப்பினருக்கு வழக்கினை நிரூபிக்கவும், எதிர்தரப்பில் வழக்கினை பொய்பிக்கவும் போதிய வாய்ப்பு கொடுக்க வேண்டியது அவசியமானதாக உள்ளது. சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதின் மூலமே உண்மை நிலையை கண்டறிய முடியும் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் நிபந்தனையாக மேற்படி சாட்சிகள்

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகும் போது மனுதாரர்/எதிரி தரப்பில் அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகளுக்கு தலா ரூ.500/- வீதம் ரூ.1,000/- வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

5. முடிவாக இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் இன்று 17.03.2026 ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிபுத்தூர்.